# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 10

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. பின்வருவனவற்றுள் சார்பெழுத்துகள்

அ) க,ச ஆ) ம்,ங் இ) ச்,த ஈ) அ,இ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மதுரையில் கழகம் அமைத்துத் தமிழ் வளர்த்தவர்கள்

அ) சேரர் ஆ) பாண்டியர் இ) ஆரியர் ஈ) சோழர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. வயலும் வயல் சார்ந்த இடமும்

அ) மருதம் ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. காவிரியாறு பற்றிப் பாடிய கவிஞர்

அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர்
இ) முடிஅரசன் ஈ) கனக சுப்புரத்தினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. அயில் என்ற சொல்லின் பொருள்

அ) கத்தி ஆ) கோடரி இ) வேல் ஈ) வில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. மாதவி அழகான மலரைச் சூடினாள்.
இதில் வந்துள்ள செயப்படுபொருள் அடைமொழி

அ) அழகான ஆ) மாதவி இ) மலர் ஈ) சூடினாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சொல்லிய உறுப்புகள்

அ) ஐந்து ஆ) ஆறு இ) நான்கு ஈ) ஏழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. நாவலந்தீவு என அழைக்கப்பட்ட நாடு

அ) இந்தியா ஆ) இலங்கை இ) குமரிக்கண்டம் ஈ) மாலைதீவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இமயவரம்பன் என அழைக்கப்பட்ட மன்னன்

அ) சேரலாதன் ஆ) சோழன்
இ) பாண்டியன் ஈ) சேரன் செங்குட்டுவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. கணிகன் என்னும் சொல் குறித்து நிற்பது.

அ) மருத்துவரை ஆ) சோதிடனை
இ) வீரனை ஈ) பாடகனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. மொழிக்கு முதலில் வரும் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 200 ஆ) 100 இ) 135 ஈ) 18

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. நாளை நான் வருவேன் என்பது

அ) செப்பு வாக்கியம் (சொல்லியம்) ஆ) வினாவாக்கியம்(சொல்லியம்)
இ) வியப்பு வாக்கியம்(சொல்லியம்) ஈ) விருப்பு வாக்கியம்(சொல்லியம்)

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. தேன்சிந்தும் காடுகளும் மீன்பாடும் வாவிகளும் நிறைந்தது.

அ) யாழ்ப்பாணம் ஆ) மட்டக்களப்பு
இ) வன்னி ஈ) திருகோணமலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. தங்கத் தமிழ்மீது ஆணை, தாய்நிகர் மண்மீது ஆணை எனக் கூறியவர்.

அ) மகாகவி ஆ) பாரதி
இ) காசிஆனந்தன் ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. மண் என்ற சொல்

அ) இடுகுறிப்பெயர் ஆ) காரணப்பெயர்
இ) காரணஇடுகுறிப்பெயர் ஈ) சினைப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. இடப்பெயருக்கு எடுத்துக்காட்டு.

அ) பூ ஆ) வன்னி இ) மல்லிகை ஈ) நீலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. முதன் முதலில் மாந்த இனம் தோன்றிய இடம்.

அ) குமரிக்கண்டம் ஆ) ஆபிரிக்கக்கண்டம்
இ) அமெரிக்கக்கண்டம் ஈ) ஐரோப்பாக்கண்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. உலகின் முதன்மொழி தமிழ் என்பதை நிறுவிய அறிஞர்

அ) மறைமலை அடிகள் ஆ) தேவநேயப்பாவாணர்
இ) சின்னத்தம்பிப்புலவர் ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஒரு செயலைக் குறித்து நிற்கும் சொல்.

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்
இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கட்டுவித்தான் என்பது

அ) குறைவினை ஆ) குறிப்புவினை
இ) பிறவினை ஈ) தன்வினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. கனகவிசயரின் முடித்தலை நெரித்துக் கல்லினை வைத்தவன்

அ) சேரமகன் ஆ) சோழமகன்
இ) பாண்டியமகன் ஈ) ஈழமகன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கலைகளில் சிறந்ததாகக் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடும் கலை.

அ) நடனம் ஆ) இசை
இ) ஓவியம் ஈ) நாடகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றியவினை

அ) எடு ஆ) நட இ) படி ஈ) குடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. முடிவுரை இடம்பெறுவது

அ) அஞ்சலில் ஆ) கட்டுரையில்
இ) பாடலில் ஈ) கவிதையில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. புறநானூறு என்னும் நூல் கூறுவது

அ) காதலை　　　　ஆ) நட்பை

இ) வீரத்தை　　　　ஈ) விருந்தோம்பலை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

26. ஒரே எழுவாயில் பல சொல்லியங்கள் தொடரும் போது வரும் நிறுத்தற்குறி

அ) காற்புள்ளி　　　　ஆ) முற்றுப்புள்ளி

இ) அரைப்புள்ளி　　　　ஈ) முக்காற்புள்ளி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

27. மலர்ப்படுக்கை மீது பள்ளிகொள்வது.

அ) அன்னம்　ஆ) வாத்து　இ) கொக்கு　ஈ) மயில்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

28. பின்வருவனவற்றுள் குற்றியலுகரச் சொல்

அ) வரவு　ஆ) வாயு　இ) கொம்பு　ஈ) புழு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

29. பின்வருவனவற்றுள் தொடர் மொழி

அ) கானகம்　ஆ) தங்கை　இ) உண்　ஈ) இராப்பகல்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

30. அச்சம் இன்றி ஆடிப்பாட வேண்டியது.

அ) விடுதலை　ஆ) பணம்　இ) கல்வி　ஈ) புகழ்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

பல்லவ மன்னர்களில் ஒருவன் நந்திவர்மபல்லவன். இவன் தி.பி 878 முதல் 903 வரை ஆட்சி செய்தான். வீரத்திலும் தீரத்திலும் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினான். தமிழ் மீது தணியாத தாகம் கொண்டவன். இவனுடைய தம்பி ஒருவன் நந்திவர்மனை வீழ்த்தி அரசைக் கைப்பற்ற எண்ணினான். ஆனால் வீரத்தால் அவனை வெல்ல முடியாது என்றுணர்ந்து தமிழால் அவனைக் கொல்ல எண்ணினான். எனவே, தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுப் பெரும் புலவனானான். அந்நாளில் தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான கலம்பகம் என்னும் இலக்கியம் பாடப்பட்டிருக்கவில்லை. கரணியம் கலம்பகம் யாரைப் பற்றிப் பாடப்பட்டதோ அவன் நூல் அரங்கேற்றத்தின் கடைசிப் பாடல் பாடுகையில் பற்றி எரிந்து விடுவான் என்று நம்பப்பட்டது. எனவே ஒருவரும் தங்கள் மீது கலம்பகம் பாட இணங்கவில்லை. நந்திவர்மனின் தம்பி தமையன் மீது ஒரு கலம்பகம் பாடினான். அது நந்திக்கலம்பகம் எனப்படும். மன்னனின் அமைச்சர்கள் அதை அரங்கேற்றவும் நந்தி அதைக் கேட்கவும் விடாமல் தடுத்தனர். ஆனால் அவன் தம்பி ஒரு பெண்ணைக் கொண்டு ஒருசில பாடல்களைப் பாடுவித்தான். நள்ளிரவில் நகர்க்காவல் வந்த மன்னன் அதைக் கேட்டு அந்தக் கலம்பகத்தை முழுவதும் கேட்க விரும்பினான். அமைச்சர் தடுத்தும் அவன் கேட்கவில்லை. தமிழில் கலம்பக இலக்கியம் தோன்றுவதற்காக நான் சாவேன் என்று அரங்கேற்றத்தை ஏற்பாடு செய்தான். முறைப்படி 99 பந்தல்களும் நூறாவதாக ஈமவிறகும் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு பாடலும் முடிய பந்தல் ஒவ்வொன்றாய் தீப்பிடித்து எரிந்து, கடைசிப் பாடலின் போது ஈமத்தில் அமர்ந்தான் நந்திவர்மன். பாடல் பாடி முடிந்ததும் ஈமம் பற்றி எரிந்தது. ஆனால் கலம்பகம் பாடிய தம்பி, தமையன் எரிவதைக் கண்டு மனம் பொறாமல் தானும் ஈமத்தீயில் விழுந்து உயிர் துறந்தான்.

1. கலம்பகம் பாடி முடிந்ததும் எது பற்றி எரிந்தது?

________________________________________

________________________________________

________________________________________

2. யார் மீது கலம்பகம் பாடப்பட்டது?

3. நந்திவர்ம பல்லவன் எவ்வாறு இறந்தான்?

4. நந்திக் கலம்பகம் எவ்விலக்கிய வகையைச் சேர்ந்தது?

5. இப்பந்திக்கு ஏற்ற ஒரு தலைப்பு எழுதுக?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. தமிழரின் உடைமை எனக் கண்ணதாசன் எதனைக் குறிப்பிடுகின்றார்?

2. இலெமூரியாக் கண்டத்தின் பழந்தமிழ்ப் பெயர் என்ன?

3. எதைக் கேட்டுத் தமிழ்ப்படைவீரர் போருக்கு எழுந்ததாகக் கவிஞர் காசிஆனந்தன் கூறுகிறார்?

4. வடநாட்டு அரசர் மீது சேரன் செங்குட்டுவனுக்கு வஞ்சினம் மூண்டது ஏன்?

5. இயற்கைத் தாய் என்ற பாடலைப் பாடியவர் யார்?

6. கழக இலக்கியங்களில் அகம், புறம் எனச் சுட்டப்பட்டவை யாவை?

7. கழக இலக்கியங்களில் முதற் பொருள் சுட்டுவது எவற்றை?

புள்ளிகள் 10

**4) பாடலை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இயற்கைத்தாய் நான் அழைக்கின்றேன்
எங்கே நீங்கள் இருக்கின்றீர்கள்
உங்களைச் சுற்றித்தானே நாளும்
உலாவந்து கொண்டிருக்கிறேனே நானும்
எத்தனை வடிவில் நானே
என்னைக் கொஞ்சம் பாரும் பாரும்
ஏங்கி ஏங்கி அழும் குழந்தை கூட
என்னைப் பார்த்து சிரித்திடும் நன்றாய்
வண்ண வண்ண மலர்களாக
வகை வகையான நீர்நிலைகளாக
எங்கும் ஒரே பசுமையாக
இருக்கின்றேனே நானும் பரந்து
இறைவன் உங்களுக்காய் என்னைப் படைத்தானே
இதை நீங்கள் ஏனோ மறந்து போனீர்
என்னை மாசுபடுத்துகின்றீர்
இதனால் இடர் உமக்கே என்றும்.

1. குழந்தை எதைப் பார்த்து சிரிப்பதாகக் கூறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

2. இயற்கை எங்கெல்லாம் இருப்பதாகப் இப்பாடல் கூறுகிறது?

______________________________________________

______________________________________________

3. எதனால் எமக்கு இடர் வருகிறது என்று கூறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

4. யாருக்காக இயற்கையை இறைவன் படைத்தான்?

______________________________________________

______________________________________________

5. இப்பாடலிலிருந்து நீர் உணர்ந்து கொள்வது என்ன?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண வினா - விடை தருக.

1. காற்புள்ளி, வியப்புக்குறி என்னும் நிறுத்தற் குறிகள் இடம் பெறுமாறு இரண்டு சொல்லியங்கள் எழுதுக.

2. குற்றியலுகர எழுத்துகள் எத்தனை? அவை எவை?

3. கருத்தை அடிப்படையாகக் கொண்டு சொல்லியங்கள் எத்தனை வகைப்படும்? ஏவற்சொல்லியம் ஒன்று தருக.

4. காரண இடுகுறிப் பெயர்கள் இரண்டு தருக.

5. செய்வினை, செயப்பாட்டு வினை ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

இப்போது எல்லோரும் கணினியைப் பயன்படுத்துகின்றனர். கணினி எமது வாழ்க்கையில் முதன்மை வகிக்கிறது. பிள்ளைகள் தங்கள் கல்விக்காகக் கணினியைப் பயன்படுத்துகின்றனர். நாங்கள் இணையத்தளம் மூலமாக நிறைய மின்னஞ்சல்களை அனுப்பவும் பெறவும் முடியும். நாங்கள் எத்தனை மின்னஞ்சல்களையும் விரைவாகவும் மேலதிக செலவின்றியும் அனுப்பலாம். இணையத்தளம் எங்கள் எல்லோரையும் ஒன்றிணைப்பதால் உலகம் சுருங்கி விட்டது என்பர். நாங்கள் இணையத்தளத்தில் செய்திகளையும் காலநிலை முன்னறிவித்தல்களையும் வாசிக்கலாம். மேலும் நாங்கள் திரைப்படங்கள் பார்ப்பதுடன் இசையையும் கேட்கலாம். எங்கள் வீட்டில் இருந்து கொண்டு உலகத்தைப் பார்க்க முடியும். தகவல் தொழில்நுட்பம் இந்த வாய்ப்பை இந்த உலகத்தில் உள்ள மக்களுக்குக் கொடுத்திருக்கிறது.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ★ கடல் கொண்ட தமிழகம்.
- ★ சேரமான் வஞ்சினம் என்ற பாடத்தினை உமது உரைநடையில் எழுதுக.
- ★ நீர் கண்டுகளித்த இயற்கைக் காட்சி.

புள்ளிகள் 20